உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௨] யுவ௵ ஆவணி௴ [பகுதி-௧௰.

Vol. XXXII. *August–September 1935* No. 10.

உள்ளுறை.

கம்பராமாயண இன்கவித்திரட்டு:- } ஸ்ரீமத். ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், G.B. V.C. ௨௬௧-௨௭௬

பாண்டியர்வரலாறு:- ஸ்ரீமத். T.V. சதாசிவபண்டாரத்தார் ௨௭௭-௨௯௨

பெருந்தொகைப் பொருட்குறிப்பகராதி: } ஸ்ரீமத். மு. இராகவையங்கார் 39–46

சிராமலைக்கோவை (குறிப்புரையுடன்):- } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய - திராவிடவித்யாபூஷண - தாக்ஷிணாத்யகலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர் 9–16

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு :—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1935.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avergal and published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54 New Jail Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௨.] யுவஹு ஆவணிமீ [பகுதி-௰.

Vol. XXXII. *August-September 1935.* No. 10.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௨௫௮-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இராமன் மோதிரத்தை அனுமான் காட்டச் சீதை காணல்.

91 '"மீட்டும்உரை வேண்டுவன இல்லை" என, "மெய்ப்பேர்
தீட்டியது, தீட்டரிய செய்கையது, செவ்வே
நீட்டி"தென, நேர்ந்தனன்;' எனநெடிய கையால்
காட்டினன்ஓர் ஆழி. அது வாணுதலி கண்டாள்.

இ-ள். ' "இன்னமும் சொல்லல்வேண்டியவைகள் (ஆன அடையாளவார்த்தைகள்) இல்லை" என்று சொல்லி, "எனது மெய்யான பேர் எழுதியது; சொல்லுதற்கரிய வேலைப்பா டமைந்தது; (ஆகிய) இதை (ச் சீதைகையில்) நேராகக் கொடு" என்று கொடுத்தான்' என்று சொல்லி (அனுமான்) தனது நீண்ட கையினால் ஒரு மோதிரத்தை (எடுத்து)க் காட்டினான். அதைச் சீதை கண்டாள்.

மீட்டும் - மீளவும்; மேலும் அல்லது இன்னமும் என்ற பொருள்படநின்றது. உரை - உரைத்தல் - சொல்லல் (முதனிலைத்தொழிற்பெயர்). தீட்டுதல் - சித்திரித்தல்; சொல்லல் (தமிழகராதி). செய்கை - வேலைப்பாடு. தீட்டரிய செய்கையது - சித்திரித்தற்கரிய வேலைப்பாடுடையது (இந்த மோதிரம்போலச் சித்திரமெழுதுவதே யரியதென்றால் உருப்படிசெய்வது அதிகமாக அரியதென்றபடி); சொல்லுதற்கரிய வேலைப்பாடுடையது (காட்டியறிவிக்கக்கூடியதன்றிச் சொல்லியறிவிக்கக்கூடாத வேலைப்

*

பாடுடையதென்றபடி). செவ்வே - நேராக. நீட்டுதல் - கொடுத்தல். நேர்தல் - கொடுத்தல். ஆழி - மோதிரம். வாள் நுதலி - ஒளிபொருந்திய நெற்றியையுடையவள். இப்பாட்டில் 'மீட்டும் உரைவேண்டுவன இல்லை' என்பதும் 'மெய்ப்பேர் தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே நீட்டிது' என்பதும் இராமன்கூற்றாக அனுமான்கூறியவை; 'என' இரண்டும் அனுமான்கூற்று; எஞ்சியது கவிக்கூற்று.

இராமன்மோதிரத்தைக் கண்ட சீதைதன்மை.

92 இறந்தவர் பிறந்தபயன் எய்தினர்கொல் என்கோ!
மறந்தவர் அறிந்துணர்வு வந்தனர்கொல் என்கோ!
துறந்தஉயிர் வந்திடை தொடர்ந்ததுகொல் என்கோ!
திறந்தெரிவ தென்னைகொல்!இந் நன்னுதலி செய்கை.

இ-ள். (இராமன்மோதிரத்தைக் கண்ட) சீதையின்மகிழ்ச்சியை (இம்மை மறுமை யின்பங்களாகிய பிறந்ததனாலாம் பயன்களை அடையமுயலாமல் வீணே காலங்கழித்து) இறந்துபோனவர்கள் (அந்தப்)பிறந்த பயன்களை (க் கிட்டுமென் றெதிர்பாராதிருக்க) அடையப்பெற்றார் (ஆயின், அவர்கள் அடையும் மகிழ்ச்சியைப் போலும்) என்பேனோ! (அறிதற்கரியஒருபொருளை) அறிந்து(பின்பு) மறந்தவர் (திரும்ப அப்பொருளைப்பற்றிய) அறிவுவரப்பெற்றார் (ஆயின், அவர் அடையும் ஆனந்தத்தை நேரும்) என்பேனோ! (உடலைவிட்டு) நீங்கிப்போன உயிர் (திரும்ப அந்த) உடலினிடத்தே வந்து தொடர்புற்றது (ஆயின், அதன் உவகையை ஒக்கும்) என்பேனோ! அந்த மகிழ்ச்சியின்தன்மையைத் தெரிந்துசொல்வது எவ்வாறோ ? (அறியேன்).

கொல் நான்கும் அசைநிலை. உவமேயத்தில் 'நன்னுதலி செய்கை' என்பதற் கியைய, உவமானங்களில் எய்தினர்செய்கை வந்தனர்செய்கை தொடர்ந்ததுவின்செய்கை என மூன்று செய்கைகள் வருவித்துக் கொள்க. மகிழும் செய்கை, 'செய்கை' யெனச் சுருக்கிக் கூறப்பட்டது. பயன் என்பது, இம்மை மறுமைப் பயன்களைக் குறித்தலால், சாதியொருமைப் பெயர். 'துறந்த' 'இடை' என்பவைகளின் முன் 'உடல்', அவாய்நிலையால்வந்த சொல். பின்வரும் 'பிறந்தபயன் எய்தினர்' என்பதனால், 'இறந்த

வர்' என்பதற்குப் பிறந்தபயன் எய்த முயலாமல் இறந்தவர் என்று பொருள் கூறப்பட்டது. பொருள்செய்தற்குப் பொருத்தமாக, 'மறந்தவர் அறிந்து' என்பது, அறிந்து மறந்தவர் எனப் பின் முன்னாக மாற்றப்பட்டது. துறத்தல் - நீங்குதல். இடை - இடம். நன்மை - நலம் - அழகு (தமிழகராதி). நுதல் - நெற்றி. நல்நுதலி - அழகிய நெற்றியை உடையவள். செய்கை - (மகிழும்) செயல். 'இறந்தனர்' 'மறந்தனர்' பிரதிபேதங்கள்.

முதலடிக்குப் 'போன உயிர் திரும்பவும் வரப்பெற்றவர்' என்ற பொருள் பொருந்தாது, அதே பொருளுடைய மூன்றும் அடி கூறியதுகூறலாமாதலால்.

93 இழந்தமணி புற்றரவெதிர்ந்ததென லானாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை ஒத்தாள்;
குழந்தையை உயிர்த்தமலடிக்குவமை கொண்டாள்;
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.

இ-ள். (சீதை, மகிழ்ச்சியடைந்த தன்மையில்,) காணமற்போன நாகரத்தினத்தைக் காணப்பெற்றதான நாகம் (உவமை) என்று சொல்லத்தக்கவளானாள்: இழந்தனவான பழைய செல்வங்களை (த் திரும்ப)ப்பெற்றவரைப் போன்றாள்: குழந்தையைப்பெற்ற பிள்ளையில்லாதிருந்தவளை ஒத்தாள்: (கண்ணிழந்து) வருந்தி (த் திரும்ப)க் கண்ணைப்பெற்ற உடலை (உடையவரை) நேர்ந்தாள்.

உயிர்த்தல் - ஈனுதல். உழத்தல் - வருந்தல். உயிர்ப்பொறை - உடம்பு.

'குழந்தையைப்பெற்றபிறகு மலடித் தன்மை நீங்கியதாயினும், 'மலடி' என்று கூறினது, முன்னிருந்த தன்மையைநோக்கி; இது, பூத பூர்வ வ்யவஹார மெனப்படும்.'

இதற்கு முந்தியபாட்டிலும் இதனிலும் இராமன்மோதிரத்தைக்கண்ட சீதை அடைந்த கழிபெருங் களிப்பு மிகவும் நன்றாகப் புலப்படுமாறு, கவி, தொடுத்து ஏழு உவமானங்களை இனிதெடுத்தாண்டிருக்கின்றார்.

இராமனைப் பிரிந்து வருந்தி, இனி அவனை அடைதல் கூடுமோவென்று ஏங்கியிருந்த சீதை, அவன் மோதிரத்தைக் கண்டவுடனே, அவனைத் திரும்பவும் அடைந்ததாகக் கருதி மகிழ்ந்தாள்.

ஆதலால், அவள் அடைந்த மகிழ்ச்சி, முன் எய்தியிருந்ததோர் இனியபொருளை இடையே இழந்து நெடிது வருந்தித் திரும்பப்பெற்றோர் அடையும் மகிழ்ச்சியாம். மேற்குறித்த ஏழு உவமானங்களுள் முதலாவதாகிய இறந்தவர் பிறந்தபயன் எய்திய மகிழ்ச்சியும் ஆறாவதாகிய மலடி குழந்தையை உயிர்த்த மகிழ்ச்சியும், முன் அடையாதிருந்த இனிய பொருளை அடையும் மகிழ்ச்சியாதலால், சீதையின் மகிழ்ச்சிக்கு முழுதும் ஒவ்வாது ஒருபகுதியே ஒத்திருத்தலும் ஏனைய ஐந்து உவமானங்களிற் குறித்த மகிழ்ச்சிகள்யாவும் முழுதும் ஒத்திருத்தலும் கவனிக்கத்தக்கவை. உவமான உவமேயங்கள் முழுதும் ஒத்திருப்பது முற்றுவமை அல்லது பூரண உவமை யென்றும் சிலபாகமட்டும் ஒத்திருப்பது ஒருபுடையுவமை அல்லது ஏகதேசஉவமை யென்றும் கூறப்படும்.

இராமன்மோதிரத்தை வாங்கிய சீதைசெய்கை.

94 வாங்கினள்; முலைக்குவையில் வைத்தனள்; சிரத்தால்
தாங்கினள்; மலர்க்கண்மிசை ஒற்றினள்; தடந்தோள்
வீங்கினள்; மெலிந்தனள்; குளிர்ந்தனள்; வெதுப்போ
டேங்கினள்; உயிர்த்தனள்: இதென்னதென லாமே.

இ-ள். (தன் குழந்தையைக் கையில் வாங்கும் தாய்போல, இராமன்மோதிரத்தைச் சீதை கையில்) வாங்கினாள்; (வாங்கினவள், அதைத்) தன் தனமுகட்டிலே வைத்துக்கொண்டாள்; (பின்பு) தலைமேலே ஏந்திக்கொண்டாள்; (அதன்பின்) கண்களிலே ஒற்றிக்கொண்டாள்; (அதனைத் தான் அடைந்தது இராமனையே அடைந்ததாகக் கருதி மகிழ்ந்து உடம்பு பூரித்ததனால், இயல்பாகப்) பெருத்த தோள்கள் அதிகமாகப் பெருத்தாள்; (உண்மையில், இராமனை அடையாமைகருதி உடம்பு) மெலிந்தாள்; (திரும்பவும் அவனை எய்தியதாக எண்ணி உடம்பு) குளிர்ந்தாள்; (அவனை மெய்யாகப் பெறாமையை மீண்டும் நினைந்து உடல்) வெதும்பி ஏக்கமுற்றுப் பெருமூச்செறிந்தாள்: (அவள் அடைந்த) இந்த நிலைமை (எப்படிப்பட்டதென்னலாம்?) இப்படிப்பட்டதென்று (மனத்தினால் உணரலாமேயன்றி வாயினாற்) சொல்லலாகாததாயிருந்தது.

குவை - மேடு. உயிர்த்தல் - மூச்செறிதல். ஏகாரம் எதிர்மறை. வீங்கல் மெலிதலும், குளிர்தல் வெதும்பலும் முரண்தொடைகள். 'என்ன தெனலாமே' பாடபேதம்.

இதற்கு முந்திய இரண்டு பாட்டுக்களில் இராமன் மோதிரத்தைக் கண்ணிற்கண்ட சீதைதன்மை வருணிக்கப்பட்டது. இந்தப்பாட்டிலும் அடுத்தபாட்டிலும் அதைக் கையில் வாங்கிய அவள் செய்கை விதந்துரைக்கப்படுகின்றது.

சீதை இராமனைப் பிரிந்ததை நினைந்து வருந்தியபோது வெதுப்பும் அவனை அடைந்ததாகக் கருதியபோது குளிர்ச்சியும் எய்தினதாக இங்கே கவிக்கூற்ருகக் கூறிய கம்பர் இக்கருத்தையே விசேட நயம்பட அனுமான்கூற்ருகத் திருவடி தொழுதபடலத்திற் கூறுவது அறிந்து ஆனந்திக்கத்தக்கது. அது வருமாறு:—

ஒருகணத் திரண்டு கண்டேன்: ஒளிமணி ஆழி ஆன்ற
திருமுலைத் தடத்து வைத்தாள்; வைத்தலும், செல்வ! நின்பால்
விரகமென் பதனின் வந்த வெங்கொழுந் தீயி னல்வெந்
துருகிய துடனே ஆறி வலித்தது; குளிர்ப்புள் ளூற:

சில அலைகள் தொடுத்து அடித்து அமர்வதற்கும் திரும்பச் சில அலைகள் விடாது வீசி ஓய்வதற்கும் இடையே தோன்றும் * நித்தரங்க சமுத்திரத் தோற்றம்போல, 'முலைக்குவடுவைத்தல்' முதல் 'உயிர்த்தல்' ஈருக நிகழ்ந்த செயல்களுக்கும் 'மோத்தல்' ஆதியாக 'விழுங்கல்' அந்தமாக நிகழ்ந்த செயல்களுக்கும் இடையே காணப்பட்ட, சீதை மகிழ்ச்சிமேலீட்டால் தம்பித்துச் செயலற்றிருந்த ஆனந்தநிலைமையை 'இது' என்பதனல் உய்த்துணரவைத்தார்.

இங்கே சீதை உற்ற செயலற்ற ஆனந்தநிலைமையை 'இது' என்றதுபோல, உரைத்தற்கரிய பொருளெதனையும் இது எனச் சுட்டிப் போதல் கம்பர்கவிமுறை என்பதற்கு உதாரணமாக, இராமனதுநலங்களை வாலிவாயிலாகக் கூறுங்கால்,

'குலம்இது; கல்வி ஈது; கொற்றம் ஈ தூற்று நின்ற
நலம் இது; புவனம் மூன்றும் நாயகம் உன்ன தன்றே ?
வலம் இதிவ் வுலகம் தாங்கும் வண்மை ஈது;'

என்றதனைக் காண்க. பின்வரும் 'பாழிய' என்ற 100–ஆம் பாட்டுரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிற 'அறிவும் ஈதே' என்ற பாட்டையும் பார்க்க.

---

* நித்தரங்க சமுத்திரம் - அலையில்லாக் கடல்.

சீதையின் செயலற்ற தன்மை இப்படிப்பட்டதென்று உணர லாமேயன்றி உரைக்கலாகாதென்பார் 'இதின்ன தேனலாமே' என்ருர்.

ஆகவே, கவி, 'சீதை செயலற்றிருந்த நிலைமையை உன்னி உணர்ந்து உவகையுறுகின்றேன்; ஆயின், உரைக்கமாட்டுகிலேன்' என்ருராவர். யாமோ, உரைக்கமாட்டாமையேயன்றி, உணரமாட் டாமையும் உடையேமாயுள்ளேம்.

இம் மாட்டாமையை ஒருவாறு பின்வருமாறு விளக்கலாம்:

கவி, இராமன்மோதிரத்தைப் பெற்ற சீதை உற்ற இன்ப மாகிய மலையின் உன்னதத்தை நாம் கண்டுகொள்ளும்படி அந்த மலைமேல் நம்மைக்கூட்டிக்கொண்டு ஏறுகின்ருர். ஏறியவர், இனி ஏறமுடியாதென்ற உயரத்தை எய்தியபோது, அங்கிருந்து அந்த ரத்தேதாவி, அந்த மலையுச்சியை அடைந்து ஆனந்தபரவசராகின் ருர். மேற்கூறிய உயரத்தை அவரைப் பின்தொடர்ந்து நடந்து அடைந்த யாம், அப்பாற் செல்லமாட்டாமல், (தாண்டவல்லான் தாண்டி அக்கரைத் தருக்கனியை அருந்தாநிற்கத் தாண்டமாட்டா தான் தயங்கிநிற்றல்போல,) மயங்கிநிற்கின்றேம்.

95 மோக்கு(ம்;)முலை வைத்துற முயங்கும்;ஒளிர் நன்னீர்
நீக்கிநிறை கண்இணை ததும்ப,நெடு நீளம்
நோக்கும்;நுவ லக்கருதும்; ஒன்றும்நுவல் கில்லாள்;
மேக்குநிமிர் விம்மலள்; விழுங்கலுறு கின்ருள்.

இ-ள். (தாய் குழந்தையைப் பாராட்டுதல்போல அவள், அந்த மோதிரத்தை) மோந்துபார்ப்பாள்; (முன் தனங்களில் வைத்தசெயலை அன்புமேலீட்டால் திரும்பவும் செய்வாளாகித்) தனங்களில்வைத்து அழுந்தத் தழுவுவாள்; (அதைப் பார்த்தற் குத் தடையாகச் சுரந்த ஆனந்தக்) கண்ணீரை (அந்நீர்) நிறைந்த கண்களினின்று துடைத்து (ப் பின்னும் அந்தக்) கண்ணீர் நிரம்பி வழியாநிற்க, நெடுநேரம் பார்ப்பாள்; (அதனேடு) பேச உன்னு வாள்; (உன்னியபடி) ஒருசிறிதும் பேசமாட்டாதிருப்பாள்; மேலே எழுகின்ற (தொண்டை) விம்மலுடையவளாய் (அவ்விம்முதலால் பேச்சுக்குத் தடையாக உண்டாகிய தொண்டையடைப்பைக் கீழே தள்ளுவாள்போல,) விழுங்கும்முயற்சிசெய்வாள்.

'மோக்கும்' 'முயங்கும்' 'நோக்கும்' 'கருதும்' என்பவை பெண்பாற்படர்க்கையில் வந்த 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். உற - பொருந்த. நெடுமை, மிகுதிகுறித்தது. நீளம், இடநீட்சியைக் குறியாது காலநீட்சியைக் குறித்தது. நெடு நீளம் - மிகநீண்டபொழுது. நெடிது என்பது கைந்நெடிது என் பதில் நீண்டது என்றும், நெடிது நோக்கினான் என்பதில் நீண்ட காலம் என்றும் பொருள்படுதல் காண்க. நவல்கில்லாள் - சொல்ல மாட்டாள். மேக்கு - மேல். நிமிர்தல் - மேலும் மேலும் மிகுதல். 'நெடுநன்னீர்' பாடபேதம்.

'நன்னீர் (- [ஆனந்தக்] கண்ணீரை) (அக் கண்ணீர்) நிறை கண்ணிணை (நின்று) நீக்கி (அது பின்னும்) ததும்ப' என இயைக்க. துக்கக்கண்ணீர் ஆனந்தக்கண்ணீர் என்பவைகளில் இப்போது சீதையிடம் தோன்றிய கண்ணீர் ஆனந்தக்கண்ணீரென்பது நன்கு விளங்கப் பெரும்பாலும் துன்பக்குறியான 'கண்ணீர்' என்னாது 'நல்நீர்' என்றார்போலும்.

நீடு நீளம் நெடுமை நெடுகுதல் நீளுதல் நீளித்தல் நீடுதல் நீடித்தல் நீட்டித்தல் ஆகியவை நெடுங்காலங் குறிக்கும். 'நெடு' என்பதை 'நெடுக' என்பதன் செய்யுள்விகாரமாகக்கொண்டு 'நெடு (க) நீள நோக்கும்' என்பதற்கு 'மிகநெடுநேரம் பார்ப்பாள்' என்றும் பொருள்கூறலாம்.

பேசவொட்டாதபடி கண்டம் விம்மித் தொண்டையடைப்பு உண்டாகுதல், அளவுகடந்த சந்தோடமேனும் துக்கமேனும் அடைந்தார்மாட்டுக் காணப்படும் *மெய்ப்பாடு.

தன்னை நெடுநேரம் பிரிந்திருந்த குழந்தையை இனிக் காண் போமோவென் றேங்கியிருந்த தாய், தன்னிடம் ஒருவர் அதைக் கொண்டுவந்துகொடுத்தபோது ஆவலுடன் கையில் வாங்கி, உச்சிமோந்தும் மார்பில்வைத்து அணைத்தும் தலைமேலேந்தியும் கண்களில் ஒற்றியும் பாராட்டி, அது பிரிந்ததை நினைந்து வெதும்பி ஏங்கி நெட்டுயிர்த்து, அது திரும்ப வந்துசேர்ந்ததை நினைந்து தேகமும் மனமும் பூரிப்பும் குளிர்ச்சியும் அடைந்து, அதைக்

* மெய்ப்பாடு - 'உள்ளத்தின் நிகழ்ச்சி புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்.'

கண்குளிரப் பார்த்துக் களித்தற்குத் தடையாக ஆனந்தக்கண்ணீர் பெருக, அதனைத் துடைக்க, அது மீண்டும் பெருகாநிற்க, நெடுநேரம் தன் குழந்தையை இன்புற நோக்கி, அதனோடு பேச விரும்ப, உவகைமிகுதியால் ஒன்றும் பேசவொட்டாதபடி கண்டம் விம்மித் தொண்டையடைப்புண்டாக, அத்தொண்டையடைப்பைக் கீழேதள்ளுவாள்போல மீண்டும் மீண்டும் விழுங்காநிற்பளன்றே? அந்தத் தாய்செயல்போல, இராமன்மோதிரத்தை அநுமான்கொடுக்கக் கையில்வாங்கிய சீதைசெயல்களிருந்தனவென, மேலே உரையில் 'தன்குழந்தையைக் கையில்வாங்கும் தாய்போல' எனச் சுருங்கக் கூறியதன் விரிந்த பொருளைத் தெரிந்துகொள்க.

96 நீண்டவிழி நேரிழைதன் மின்னினிற மெல்லாம்,
பூண்டதொளிர் பொன்அனைய பொம்மல்நிறம்; மெய்யே,
ஆண்டகைதன் மோதிரம் அடுத்தபொரு ளெல்லாம்
தீண்டளவில் வேதிகைசெய் தெய்வமணி கொல்லோ!

இ-ள். (இராமன்மோதிரம் பட்டதனால்) சீதையின் தேக முழுதும் பொன்போன்ற பொலிவுடைய நிறத்தை அடைந்தது. இராமனுடைய மோதிரம் தன்னைச் சேர்ந்த எல்லாப்பொருள்களையும் தான் பட்டமாத்திரத்தில் (மாற்றுயர்ந்த பொன்னாக) மாற்றுகின்ற தெய்வீக ரசமணிதானோ?

நேர்மை - நுண்மை; திருத்தம். இழை - ஆபரணம். நேரிழை - நுண்மையான வேலைப்பாடமைந்த ஆபரணம் (பூண்டவள்); திருத்தமான வேலைப்பாடமைந்த ஆபரணம் (பூண்டவள்). மின் - ஒளி. நிறம் - தேகம். மின்னின் நிறம் - ஒளியையுடைய தேகம். முந்திய 'எல்லாம்' முழுதும் என்ற பொருளினும் பிந்திய 'எல்லாம்' யாவையும் என்ற பொருளினும் வந்தன. பொம்மல் - பொலிவு. மெய்யே - மெய்யாகவே. 'மெய்யே' என்பதைத் *தாப்பிசையாகப் 'பூண்டது' என்பதனோடும் 'வேதிகைசெய்' என்பதனோடும் பொருத்திப் பொருள்கொள்ளலாம். வேதிகை - வேறுபடுத்தல். தெய்வமணி - பரிசவேதியென்னும் இரசமணி. இது இரசகுளிகையெனவும் படும்.

---

* தாப்பிசைப்பொருள்கோள் - பாட்டில் இடையில் நின்ற சொல் முன்னும் பின்னும் சென்று கூடும் பொருள்கோள்.

சீதையின்தேகம் இராமனுடைய மோதிரத்தாற்பொன்னிறம் பூண்டது, அந்த மோதிரத்தின் பொன்னொளி பரவியதனாலென்றும், அம் மோதிரத்தால், சீதை இராமன்பிரிவைநினைவுகூரப் பசலைபூத்ததனாலென்றும் கூறலாம். (பசலை - பசப்பு - பொன்னிறம். அது மாதர்க்குப் பிரிவாற்றாமையால் உண்டாகும் நிறவேறுபாடு.)

97 இருந்துபசி யால்இடர் உழந்தவர்கள் எய்தும்
அருந்தும்அமு தாகிய தறத்தவரை அண்மும்
விருந்துமென லாகியது; வீயும்உயிர் மீளும்
மருந்துமென லாகியது: வாழிமணி ஆழி.

இ-ள். (சீதைக்கு அந்த) மோதிரம், பசியினால் துன்பம் அனுபவித்துக்கொண்டிருந்தவர்கள் பெற்ற அமுதுபோன்றது; (இல்லறம் நடத்தும்)தருமவான்களை அடுத்த விருந்தினனையும் ஒத்தது; சாகப்போகும் உயிரை (ச்சாகாமல்) மீளச்செய்யும் (மிருதசஞ்சீவினி) மருந்தையும் நேர்ந்தது.

இடர் - துன்பம். உழத்தல் - அனுபவித்தல். எய்தல் - அடைதல். அருந்தல் - உண்ணுதல். அமுது - உணவு; அமிர்தம்; பால்: இம்மூன்றுபொருளும் பொருந்துதல் காண்க. இங்கே, 'அறத்தவர்' என்றது கிருகஸ்தாச்சிரமதருமிகளென்னும் இல்லறத்தாரை. அண்முதல்- அண்ணுதல் - அடுத்தல். விருந்து-விருந்தினன் - விருந்தாளி. வீதல் - சாதல். வாழி -வாழ்த்து (இலக்கியச் சொல்லகராதி). மணி - அழகு; இரத்தினம். வாழி மணி ஆழி - வாழ்த்துக்குரிய அழகிய (அல்லது இரத்தினம் பதித்த)மோதிரம். 'வாழி' என்பதற்கு (அந்த மோதிரம்) 'வாழ்வதாக' எனப் பொருள்கூறுவதும் உண்டு. 'இருந்து பசியால் இடருழந்தவர்கள்' என்பதை விகுதி பிரித்துப் பொருத்திப் 'பசியால் இடருழந்து இருந்தவர்கள்' எனவும் 'பசியால் (நடக்கமாட்டாமல் - வேறிடத்துக்கு உணவு தேடிச் செல்லச் சக்தியில்லாமல் இருந்தஇடத்தே) இருந்து இடருழந்தவர்' எனவும் இயைக்கலாம்.

இராமன்மோதிரம் சீதைக்குப் பெறலரும்பொருளாய்ப் பேருவகைவிளைத்ததற்கு 'அமுது' 'விருந்து' 'மருந்து' ஆகிய மூன்றும் உவமையாதலும், அது அவளுக்குப் பிராணபாயத்தைத் தவிர்த்ததற்கு 'அமுதும்' 'மருந்தும்' உவமையாதலும் காண்க.

சீதை அனுமானை அருமையாக விளித்துப் பேசுவாளாதல்.

98 இத்தகையள் ஆகி,உயிர் ஏமுற விளங்கும்
முத்தநகை யாள்விழியின் ஆலிமுலை முன்றில்
தத்திஉக, மென்குதலை தள்ள, 'உயிர் தந்தாய்!
உத்தம!' என,இனைய வாசகம் உரைத்தாள்.

இ-ள். இப்படிப்பட்ட தன்மையுடையவளாகி, (அளவற்ற துன்பம் அடைந்திருந்த தனது) உயிர் (அளவற்ற) இன்பம் அடையாநிற்க, (உண்டாகிய மகிழ்ச்சி காரணமாகப் புன்னகைபூத்தலால் சிறிது வெளிப்பட்டு) விளங்கிய முத்துக்களை ஒத்த பற்களையுடைய சீதை, (ஆனந்தக்)கண்ணீர்த் துளிகள் தனமுகட்டில் (முத்துக்கள்போல) உதிராநிற்க, (முன் உற்றிருந்த பேச்சுத்தடை ஒருவாறு நீங்கப்பெற்றுப் பேசத்தொடங்கிக் குழந்தைகளது மழலைமொழிகள்போல) இனியமொழிகள் குழறாநிற்கப் 'பிராணோபகாரியே! புருஷோத்தமனே!' என்று (அனுமானை விளித்துப்) பின்வரும் வசனங்களைச் சொன்னாள்.

ஏமம் - மகிழ்ச்சி. ஏமுறுதல் - மகிழ்வுறுதல். காமம் உறுதல் காமுறல் என வருதல்போல, ஏமம் உறுதல் ஏமுறலென வந்தது. நகை - பல். ஆலி - துளி - திவலை. முன்றில் - முன்னிடம். தத்தல் - ததும்புதல். உகுதல் - உதிர்தல். குதலை - இனியமொழி (தமிழகராதி). தள்ளல் - தடுமாறுதல். உயிர்தந்தாய்-உயிரைக் கொடுத்தாய் என்றும் உயிர் கொடுத்தோனே என்றும் இருபொருள்படநின்றது. வாசகம் - வசனம்.

'ஒன்றும் நவல்கில்லாள்' ஆக இருந்தவள் பேசத்தொடங்கியபோது சொற்கள் குழறுதல் இயல்பாதலால், 'மென்குதலை தள்ள உரைத்தாள்' என்றது **தன்மைநவிற்சியணி.** நாற்காலிக்குக் கால் நான்கு, முக்காலிக்கு மூன்றுகால் என்பவை போன்ற தன்மை நவில்வனவெல்லாம், வெறுந் தன்மைநவிற்சியாமேயன்றித் தன்மைநவிற்சியணி ஆகா. மேற்கூறிய 'மென்குதலை தள்ள உரைத்தாள்' என்பது போல, இனியபொருளுடையனவாய்த் தன்மைநவில்வனவே **தன்மைநவிற்சியணி** யெனற் குரியனவாமென்பது கவனிக்கத்தக்கது. தன்னைச் சாவாமற் காத்த சிறிய திருவடியென்னும் அநுமானைநோக்கிச் சீதை **'உயிர்தந்தாய்'** என்றது,

* 'ஆவியோ நிலையிற் கலங்கிய தியாக்கை யகத்ததோ புறத்ததோ' என்னும்படி நாகபாசத்தாற் கட்டுண்டு குற்றுயிராய்க்கிடந்த இலக்குமணுதியரை எழுந்திடச்செய்த பெரியதிருவடியென்னும் கருடனைநோக்கி இராமன் †'உண்டிலை யென்ன நின்ற உயிர்தந்த உதவியோனே' என உரைத்ததை நினைவுறுத்துகிறது.

சீதை அனுமானுக்கு நன்றியறிவுகூறி முகமன் மொழிதல்.

99 'மும்மையாம் உலகம் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையால் உயிர்தந் தாய்க்குச் செயல்என்னல் எளிய துண்டே?
அம்மையாய் அப்ப னுய அத்தனே! அருளின் வாழ்வே!
இம்மையே மறுமை தானும் நல்கினை! இசையோ' டென்ருள்.

இ-ள். '(சொர்க்க மத்திய பாதாளம் என்னும்) மூன்று லோகங்களையும் படைத்த தலைவ (ளுகிய பிரமதேவ)னுக்குத் (தந்தையாம் திருமாலின் அவதாரமாகிய இராமபிரானுன) தலைவனுடைய தூதவனுகி நற்குணத்தினுல் (எனக்கு) உயிரை உதவிய உனக்கு என்னுல் எளிதிற்செய்யக்கூடியதான பிரதியுபகாரமும் உண்டோ? எனக்கு அம்மையாகி அப்பனுமான கடவுளே! கருணைக் கிருப்பிடமானவனே! (இறந்தேபோவேனுயிருந்த என்னை இறவாமற் காத்து என் நாதனை யான் திரும்ப அடைதற்குக் காரணனுகி) இகலோக இன்பங்களையும், (என் நாயகனைப் பிரிந்ததனுல் இடையே தடைபட்டிருந்த இல்லறத்தை அவனைத் திரும்ப அடைந்து நடத்துதற்குத் துணைபுரிந்து) பரலோக இன்பங்களையும் (மாற்ருராற் சிறைப்பட்டு மீட்கப்பெருமற் செத்தாளென்னும் வசையைநீக்கி அம் மாற்ருர் ஒளித்துறையும் இருப்பிடத்தை எம்பிரானுக்குத் தெரிவித்து அவனுல் அவர்கள் நாசமாதற்கு ஏதுவாகி ‡'என்னை §ஒறுத்தாரைக் குலத்தினேடும் வேரறுத்தேன்' என்னும்) கீர்த்தியையும் எனக்குக் கொடுத்தாய்' என்று (சீதை அனுமானை நோக்கிச்) சொன்னுள்.

'மும்மை,' மூன்ருயிருக்குந் தன்மை எனப் பொருள்படாது, மூன்று என, 'மும்மைத்தமிழ்' என்பதிற்போலப் பொருள்பட்டு நின்றது. தூது தூதுவனுக்கு ஆகுபெயர். செம்மை, செம்மைக்

---

* பாரதம் கன்னபருவம் உசo. † நாகபாசப்படலம் உ௬௯.

‡ இப்படலம் ககஉ. § ஒறுத்தாரை - வருத்தப்படுத்திய இராக்கதரை,

குணங்களுக்கு ஆகுபெயர். 'செயல் என்னல் எளியதுண்டே?' என்பதை 'என்னற் செ(ய்)யல் எளியது (ஆன கைம்மாறு) உண்டே?' என இயைக்க. அத்தன் - கடவுள். தெய்வம் மானுடரூபமாய் உதவிசெய்கிறதென்னும் ஐதிகம்பற்றிச் சீதை அனுமானைக் கடவுளே யென்றாள். வாழ்வு - வாழ்தற்குரிய இடம் (இலக்கியச்சொல்லகராதி). முறையே இகலோகம் பரலோகம் என்னும் பொருள்களையுடைய 'இம்மை' 'மறுமை' ஆகிய இரண்டு சொற்களும் ஆகுபெயர்களாய் இகலோக இன்பங்கள் பரலோக இன்பங்கள் என்ற பொருள்கள்தந்துநின்றன. நல்குதல் - கொடுத்தல். இசை - கீர்த்தி. 'உண்டே' என்பதில் ஏகாரம் எதிர்மறைப் பொருள்படநின்ற வினு இடைச்சொல். 'அத்தனே' 'வாழ்வே' என்பவைகளில் ஏகாரம் விளி (க்கும்போது பிரயோகிக்கப்படும்) இடைச்சொல். 'இம்மையே' என்பதில் ஏகாரம் எண்ணிடைச்சொல். 'எளியதுண்டோ' 'அத்தனைய அப்பனே' பிரதிபேதங்கள்.

அனுமான் சீதைக்குச் செய்த உதவி, 'இறுதிவந்த எல்லைக்கண் ஒருவன்செய்த உபகாரம்' என்னும் 'காலத்தினுற்செய்த நன்றி'யாம்; அன்றித் 'தனக்கு முன் ஓர் உதவிசெய்யாதிருக்க ஒருவன் பிறனுக்குச்செய்த உதவி' என்னும் 'செய்யாமற் செய்த உதவி'யும் 'இவர்க்கு இதுசெய்தால் இன்னதுபயப்பரென்று ஆராய்தலிலராய்ச் செய்த உதவி' என்னும் 'பயன்தூக்கார்செய்த உதவி'யும் ஆம்.

அனுமான்செய்த நன்றியைச் சீதை இவ்வாறு உணர்ந்தாளென இந்த மிகவும் இனிமையான கவியிற் கூறியிருப்பதுபோல நயமாக, நன்றியறிவு வேறெங்கும் கூறப்பட்டிருப்பதைக் காண்பதரிது.

முந்திய பாட்டில், சீதை, அனுமானை, நன்றியறிவோடு பிராணேபகாரீ!, புருடோத்தமா! என்ற பொருள் உள்ள 'உயிர்தந்தாய்!' 'உத்தம!' என்றும், இந்தப்பாட்டில், ஊனையும் உள்ளையும் உயிரையும் உணர்வையும் உருக்கி அந்நன்றியறிவு மீக்கூர விளைந்த பேரன்புப்பெருக்கால், அருளுக்காதாரனே! அம்மையாகவும் அப்பனுகவும் அருளுருக்கொண்டருளிய ஆதிபகவனே! என்ற கருத்துடைய 'அம்மையாய் அப்பனுய அத்தனே! அருளின் வாழ்வே!' என்றும் விளித்த அருமையினும் அருமையான விழுமிய விளிகள் மிகவும் பாராட்டத்தக்கவை.

ஒருவர் முதல்முதலாகத் தாயை அறிந்து வழிபட்டுத் தாய் அறிவிக்கத் தந்தையை அறிந்து வழிபட்டுத் தந்தை (வித்தியா குருவாய்க் கல்விகற்பித்து ஞானகுருவாய்க் - கற்றதனலாய பயன் ஆன - கடவுளுண்மையறிவையும் வழிபாட்டையும்) அறிவிக்கக் கடவுளை அறிந்து வழிபடுதல் முறையென்ற கருத்துடைய 'அன்னை யும் பிதாவும் முன் அறி தெய்வம்' என்னும் அறிவுரைப்படியே, முதல்தெய்வமான தாயையும் இரண்டாந்தெய்வமான தந்தையை யும் மூன்ருவதாய் முடிவான தெய்வமான கடவுளையும் போல்வோ னே என்ற பொருள்பட, அவ் அறிவுரை முறைவைப்பை அனு சரித்து 'அம்மையாய் அப்பனுய அத்தனே' என்ரு ளென்னலாம்.

'அத்தன்' என்பதற்குப் பிதா என்னும் பொருளும் உண்டு. ஆதலால், 'அம்மையாய் அப்பனுன அத்தனே' என்பதற்கு 'அம் மையாய் அப்பனுன அப்பனே' என்றும் பொருள்கொள்ளலாம். அப் பொருளின் பொருத்தம் விளங்குதற்குச் சீதை அனுமா னுடைய அன்புமிகுதிபற்றி அவனைத் தாய் என்ருளென்றும், அறிவு மிகுதிகுறித்துத் தந்தையென்ரு ளென்றும் அவன் ஆண்பாலா யிருத்தல்காரணமாகத் 'தாயும் தந்தையும் ஆன தாயே' என்னுது 'தாயும் தந்தையுமான தந்தையே' என்ருளென்றும் கூறலாம்.

இப்போது, சீதை, தன்னைச் சாதலினின்று காத்த அனுமானை நனி சிறந்த நன்றியறிவுடையளாய் 'அம்மையாய் அப்பனுய அத் தனே' என்றது, பின்பு, அவன் இந்திரசித்தின் பிரமாத்திரத்தி ஞல் இலக்குமணுதியர் இறவாமலும் அவர்நிலைகண்டு துக்காக்கி ராந்தனுகி மூர்ச்சையடைந்த இராமன் இறுதியுருமலும் சஞ்சீவி மருந்து கொண்டுவந்து உயிர்ப்பித்தபோது, அவனை நோக்கி, இராமன், பரமகிருதஞ்ஞனுய், 'முன் தசரதன்வயிற்றிற் பிறந்து செத்துப்போனேம்; இப்போது உன்வயிற்றிற் பிறந்திருக்கின் ரேம்' என்ற கருத்துப்பட, 'மன்னிற் ரேன்றினேம், முன்னம்; மாண்டுளேம்: நின்னிற் ரேன்றினேம்.' எனத் துதித்ததை நினைப் புறுத்துகின்றது. (கிருதஞ்ஞன் - செய்ந்நன்றியறிபவன்)

சீதை அனுமானை வாழ்த்தல்.

100 'பாழிய பணைத்தோள் வீர! துணையிலேன் பரிவு தீர்த்த
வாழிய வள்ளலே! யான் மறுஇலா மனத்தே னென்னில்,

ஊழிஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் எழும்
எழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்றாள்.

இ-ள். 'வலிமையுடைய பருத்த தோள்கள் படைத்த வீரனே! (நிர்க்கதியாய்) ஒருதுணையுமில்லாதிருந்த என்னுடைய துன்பத்தை நீக்கிய வள்ளலே! நான் களங்கமில்லாத (கற்புடைய) மனமுடையேனென்றால், கற்பகாலம் ஒருபகலேயென்று சொல்லப்பெற்ற (பிரம) ஆண்டு (நூறுகொண்ட பிரமாயுசுகாலம்) எல்லாம் ஈரேழுலகங்களும் இறுதியுற்றகாலத்தும் இன்று (இருப்பது) போல, (சிரஞ்சீவியாக) இருப்பாயாக' என்று (சீதை அநுமானுக்கு வாழ்த்துக்) கூறினாள்.

பாழி - வலிமை. பணை - பருமை. பரிவு - துன்பம். வாழிய, முன்னிலையசைச்சொல் (நன்னூல், இடையியல் உக). வள்ளல் - கொடையாளன். மறு - குற்றம்; களங்கம். ஊழி - (பிரமனுக்கு ஒரு பகலென்னும்) கற்பகாலம். (கற்பம் - ஊழிகாலம். தமிழ்ச்சொல்லகராதி). வீவு - அழிவு. ஞான்று - நாளில் - காலத்தில் (தமிழகராதி). 'பாழியாம்,' 'வாழியாய்' 'உற்ற அன்றும்' பிரதிபேதங்கள்.

அநுமான் இலங்கைநகரைச் சூழ்ந்த கடலரண் காட்டரண் அகழரண் மதிலரண்களைத் தாண்டி, அந்நகரின் புறத்தும் அகத்துமுள்ள அரக்கர்கள் காவல்களைக் கடந்து தன்னை அடைந்த சாகசங்கருதித் தேகதைரியமும் மனோதைரியமும் ஒருசேர உடையானென்பதுகுறித்துச் சீதை அவனைப் 'பாழிய பணைத் தோள் வீர' என விளித்தாளெனலாம். 'பாழிய பணைத்தோள்' தேகபலத்தையும் 'வீரம்' மனோபலத்தையும் குறித்தல் தெளிவு.

'இன்றென இருத்தி என்றும்' என ஓர் அடியின் ஒருபாதியாக உரைக்கக்கூடியதை 'ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டெலாம் உலகம் எழும் - எழும்வீ வுற்ற ஞான்றும் இன்றென இருத்தி' என்றாள்' என முழுத்த இரண்டடியாக வளர்த்து நீட்டிக்கூறியது, வாழ்த்தினால் ஆயுளை நீண்டதாகச் செய்ததுபோல, வாழ்த்தைக் கூறும் வாசகத்தையும் நீண்டதாகச்செய்ததுபோன்றிருத்தல் நோக்கத்தக்கது.

அசுவத்தாமன் முதலிய சிரஞ்சீவியர் எழுவருள் அநுமான் ஒருவனென்றும், அவன் இப்போதுள்ள பிரமன் ஆயுசுக்குப்பின் அவனுடைய பதவியை அடைய வரம்பெற்றிருக்கின்றானென்றும்

யாதாயினு மொரு காரியசித்தியை அடையப் பொறுமையோடு காத்திருப்பானொருவனை அனுமான் பிரமபட்டத்துக்குக் காத்திருத்தல்போலக் காத்திருக்கின்றானென்றும் சொல்லுவது சகசமானது. அதனால், 'ஆண்டு' என்றது, (ஊழிகாலமென்னும்) கற்பகாலம் ஒருநாளிற் பாதியான பகலேயாக, அதனோடு அதுபோல நீடித்த இரவும் சேர்ந்தான நாள் முந்நூற்றறுபது கொண்ட பிரம ஆண்டு என்றும், 'ஆண்டெலாம்' என்றது, பிரம ஆண்டு நூறும் அல்லது பிரமாயுசுகாலம் முழுதும் என்றும் பொருள்படுதல் காண்க. இது புராணக்கொள்கை. இதன் விவரம் அடியில்வரும் காஞ்சிப்புராணப்பாட்டினால் (காரோணப்படலம் ந) அறியலாம்:

ஈண்டுமோ ரிருபா னுயிரந் தலையிட் டியன்றநாற் பத்துமூன் றிலக்க
யாண்டெனப் படுவ, நான்குகத் தளவை. இம்முறை யாயிர மிறந்தாற்
காண்டகு மயனுக் கொருபகல். அதுவே கற்பமாம். இரவுமத் துணைத் தவ்
ஆண்டகைக்கந்நாண்முப்பதோர் திங்கள் அஃதொருபன்னிரண்டாண்டே.

ஒருவர், கூனாய் நொண்டியாய்க் குருடு செவி டுமையாய்க் குட்டம் க்ஷயம் குன்மம் முதலிய கொடியநோய்கள் பலவற்றின் வாய்ப்பட்டுத் தளர்ச்சிமிகுந்த முதிர்ச்சியடைந்து, பொறுக்க முடியாத வருத்தம் வளர, அதனால் ஒரு நாள் ஒரு யுகம்போல நீள, இருத்தலினும் இறத்தல் நன்றென்னும்படி வாழ்நாள்கள் தள்ளிக்கொண்டும் சிரஞ்சீவியாக வாழலாம். அப்படிப்பட்ட வாழ்விலுள்ள கேடுகளனைத்தையும் விலக்கவும், இப்போது அனுமானிடத்துள்ள நலங்களெல்லாம் நிலைக்கவும், அவனைச் சீதை, 'என்றும் இன்றேன இருத்தி' என்று வாழ்த்தினாளென, இன்றேன என்பதில் கவி வெகுசாதுரியமாகப் பொதிந்து வைத்திருக்கும் பொருளை விரித்து அறிந்துகொள்க. இந்த 'இன்றேன' என்பது, சொல்லால் வாமனனையும் பொருளால் திரிவிக்கிரமனையும் போலு மெனலாம்.

அனுமானுக்கு உள்ளனவான வாழ்நாளல்லாத மற்றெல்லா நலங்களும் அதிகப்படுத்தவொண்ணாதவாறு சிறப்பாக அமைந்திருந்தனவாதலின், சீதை, அந்நலங்கள் இருந்தபடியே நிலைக்கவும் ஆயுள்மட்டும் அதிகப்படவும் வாழ்த்தினாள். அந்நலங்களையும் அவற்றால் அவன் அடைந்திருந்த மேம்பாட்டையும் அவள் அவனை நோக்கியதிசயித்துக்கூறுதலால் அறியலாம். அக்கூற்று வருமாறு:-

அறிவும் ஈதே; உருஈதே; ஆற்றல் ஈதே; அரும்புலத்தின்
செறிவும் ஈதே; செயல்ஈதே; தேற்றம் ஈதே; தேற்றத்தின்
நெறியும் ஈதே; நினைவீதே; நீதி ஈதே நினக்கென்றால்:
வெறிய ரன்றோ? குணங்களான் விரிஞ்சன் முதலாம் மேலோரே.
(உருக்காட்டுபடலம் கககக)

வெறியர் - வெறுமையுடையவர். விரிஞ்சன் - பிரமன்.

இப்போது தொடுத்துப் பொருள்கூறப்பெற்ற 'இறந்தனர் பிறந்த' என்பது முதலிய ஒன்பதுகவிகளும் பலவகை ஒளிக ளுடைய நவமணிகள்போலப் பலவகைச்சுவைகள் பொருந்தியவை கள். பிராணநாயகனைப் பிரிந்த பெருந்துன்பத்துக்குமேல் பெருந் துன்பமாக இராவணனும் இராட்சசிகளும் இயற்றிய அளவற்ற துன்பங்களை ஆற்றமாட்டாளாய் ஆவிதுறக்கும்நிலையிலிருந்த சீதை அனுமானால் இராமன்மோதிரத்தைப் பெற்று இராமனையே எய்தியதாக எண்ணி மகிழ்ந்த மகிழ்ச்சியை வியப்பும் நயப்பும் மிகுந்து விளைய விவரித்து வருணிக்கும் இக் கவிகள்போல உவ கைமிகுதியை நயம்படத் தொடர்ந்துகூறும் வேறுகவிகள் தமிழ் நூல்களில் எங்குமில்லை யென்னும்படியும் பிறமொழிநூல்களுள் ளும் இருக்குமோவென்பது ஐயப்பாடா மென்னும்படியும் முத லாறுகவிகள் இனிதமைந்திருப்பதும்,—'இத்தகையள்' என்ற ஏழாங் கவியில், உரைக்க உன்னியதை உவகைமேலீட்டால் உரைக்க மாட்டாதிருந்த சீதை ஒருசிறிது உரைக்குந்திறம் உற்ற உடனே உவகைக்கண்ணீர்த்துளிகள் ஒளிமிக்க முத்துக்கள்போல உதிரா நிற்கவும் இனியமொழிகள் இளங்குழந்தைகளின் குதலைச் சொற்கள்போலக் குழறாநிற்கவும் 'உயிர்தந்தாய்! உத்தம!' என அனுமானை அருமையாக அழைத்திருப்பதும்,—'மும்மையாம்' என்ற எட்டாங்கவியில், உள்ளன்பு சொல்லுருக்கொண்டு வெளிப் பட்டுவிளங்கினாற்போன்ற நன்றியறிவுரையும் புகழ்மொழியும் நனி இனியனவாக நன்கு மொழியப்பட்டிருப்பதும், - 'பாழிய' என்ற ஒன்பதாங்கவியில், இந்த வாழ்த்துப்போல எந்த வாழ்த்தும் இல்லை யென வாழ்த்துக்க ளெல்லாவற்றுக்கும் மகுடமான வாழ்த்து வாய்ந்திருப்பதும் பலமுறை படித்துப்பார்த்துப் பாராட்டற்பாலன வாயிருக்கின்றன. [தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பாண்டியர் வரலாறு.

[௨௫௨-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்:—இவ்வேந்தர்பெருமான் மதுரைமாநகரில் கடைச்சங்கநாளில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்த பாண்டியர்களுள் ஒருவனாவன். இவன் ஆட்சிக்காலத்திலேதான் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்களுள் ஒருவனாகிய கோவலன் தன் மனைவியாகிய கண்ணகியுடன் வாணிகஞ்செய்யக்கருதி மதுரைக்குச்சென்றனன். அவன் அங்கு ஆயர்பாடியிலுள்ள இடைச்சியர் தலைவியாகிய மாதரியின் இல்லத்தில் தன்மனைவியை இருத்தி, அவளது சிலம்பொன்றை வாங்கிக்கொண்டு, அதனை விற்பதற்கு அகநகர்க்குட் சென்றபோது எதிரில்வந்த அரசாங்கப் பொற்கொல்லனது சூழ்ச்சியினாற் கோப்பெருந்தேவியின் சிலம்பு கவர்ந்த கள்வனென்று இப்பாண்டியனால் கருதப்பட்டுக் காவலாளனால் வெட்டிவீழ்த்தப்பட்டான். இத் துன்பச் செய்தியையுணர்ந்த கண்ணகி, தன் நாயகனை ஆராயாமல் அநீதியாகக் கொல்வித்த இவ்வரசன்பாற் சென்று தன் வழக்கை எடுத்துரைத்துத் தன் நாயகனாகிய கோவலன், கோப்பெருந்தேவியின் சிலம்புகவர்ந்தகள்வனல்லன் என்று மெய்ப்பித்தாள். உண்மையையுணர்ந்த பாண்டியன் நெடுஞ்செழியன், தான் ஒரு கற்புடைமகளின் கணவனை ஆராயாது கொல்வித்தமைக்குப் பெரிதும் கவன்று, அத் தீச்செயலை உன்னியுன்னி நெஞ்சம் நடுக்குற்றுத் தாழ்ந்த குடையனாய்த் தளர்ந்த செங்கோலனாய்,

'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது;என் ஆயுள் கெடுக'

என்றுரைத்து அரசுகட்டிலில் மயங்கிவீழ்ந்து உயிர்துறந்தனன். தன்கணவன் இறந்தசெய்தியையறிந்த கோப்பெருந்தேவியும் அத்துன்பத்தை ஆற்றாது சிறிதுநேரத்திற்குள் உயிர்நீத்தனள். தான் அறியாதுபுரிந்த ஒரு பிழைக்காகத் தன் ஆருயிரையே இவ்வரசன்

போக்கிக்கொண்டனனெனின், இவனது ஆட்சிக்காலத்திற் குடிமக்கள் எல்லோரும் எத்தகைய இன்னல்களும் எய்தாது இன்புற்றுவாழ்ந் திருத்தல்வேண்டுமென்றுகூறுவது சிறிதும் புனைந்துரையாகாது.

இப்பாண்டியனுக்குநேர்ந்த தீவினைத்திறங்களைக் கேட்ட சேரமன்ன னாகிய செங்குட்டுவன் பெரிதும் வருந்தித் தன்பால் வந்திருந்த சங் கப்புலவராகிய மதுரைக் கூலவாணிகன்சாத்தனாரை நோக்கிப் 'புலவீர்! அவன் செங்கோலினின்று தவறியசெய்தி என்னையொத்த அரசர்க்கு எட்டுமுன்னர் உயிர்துறந்தது, தீவினையால் வளைக்கப்பட்ட கோலை உடனே செங்கோலாக்கியது; அரசராயுள்ளார்க்குத் தம் நாட்டிற் காலத்தில் மழைபெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் தவறிழைக்குமாயின் அச்சம்; கொடுங்கோற்கஞ்சிக் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அரசர் குலத்திற்பிறத்தல் துன்பமல்லது தொழுதகவில்லை' என்று மிகவும் இரங்கிக்கூறிய அரியமொழிகள் ஈண்டு அறிந்துகோடற்கு உரியன வாகும்.

அன்றியும், மதுரைமாநகரம் தீப்பற்றியெரிந்தஞான்று, கண்ணகி முன்னர்த்தோன்றிய மதுரைமாதெய்வம் நெடுஞ்செழியனது செங் கோற்சிறப்பையும் கோவலனது ஊழ்வினை உருத்துவந்து தன்பயனை நுகர்வித்ததென்னும் உண்மையினையும் விளக்கிக்கூறியவாலாற்றைச் சிலப்பதிகாரத்திலுள்ள கட்டுரைகாதையிற் பாக்கக் காணலாம். இதனா லும் இவனது செங்கோலினதுமாண்பு ஒருவாறு இனிது புலனாகும்.

இனி, இவனது செங்கோற்பெருமையோடு ஒருங்குவைத்துப் புகழ்தற்குரியனவாய் அடுத்துநிற்பன இவனது வீரமும் செந்தமிழ்ப் புலமையுமாகும். இவன் வடநாட்டிலிருந்த ஆரியமன்னர்களைப்போரிற் புறங்கண்டு புகழெய்தியவன் என்பது,

'வடவாரியர் படைகடந்து
தென்றமிழ்நா டொருங்கு காணப்
புரைதீர்கற்பிற் றேவிதன்னுடன்
அரசுகட்டிலிற் றுஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியன்'—

என்னும் இளங்கோவடிகளது அருமைத்திருவாக்கினாலும், இவனது இயற்பெயருக்குமுன்னர் அமைந்துள்ள 'ஆரியப்படைகடந்த' என் னும் அடைமொழியாலும் நன்கு வெளியாகின்றது.

இவன் கற்றோர்பால் மிக்க மதிப்புடையவன் என்பதும், கல்வி கற்றலையே பெரும்பயனாகக் கருதியவன் என்பதும் இவன் பாடியுள்ள 183-ஆம் புறப்பாட்டினால் அறியப்படுகின்றன. அப்பாடல் அடியில் வருமாறு:—

'உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்ற னன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவருள்
அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே.'*

பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்:—ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன் உயிர் துறந்தபின்னர், கொற்கைநகரத்தில் இளவரசாயிருந்து ஆட்சிபுரிந்துவந்த வெற்றிவேற்செழியன் என்பான் பாண்டிநாட்டை அரசாளும் உரிமையை எய்தினான். சேரன்செங்குட்டுவன் கண்ணகியின்படிமம் அமைத்தற்கு இமயத்தினின்றும் கல்கொணர வடநாட்டிற்குச் சென்றிருந்தபோது இவ்வரசிளங்குமரனுக்கு மதுரைமாநகரில் முடிசூட்டுவிழா நடைபெற்றது.† இவன் முடிசூடிக் கொண்டபின்னர் நன்மாறன் என்ற வேறுபெயருடையவனாய்த் திகழ்ந்தனன் என்று தெரிகின்றது. இவனது ஆட்சிக்காலத்திற் பாண்டிநாடு மழைவளமிழந்து வறுமையுற்றிருந்தது. அவ் வறுமை நீங்கிக் குடிகள்

---

* இதன்பொருள்:—தம் ஆசிரியர்க்கு ஓர் ஊறுபாடுற்றவிடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும் மிக்கபொருளைக்கொடுத்தும் வழிபாட்டுநிலைமையை வெறாது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னோ காரணமெனின், பிறப்பு ஒரு தன்மையாகிய ஒருவயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; ஒரு குடியின்கட் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருக வென்னாது அவருள் அறிவுடையோன் சென்றநெறியே அரசனும் செல்லும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்தில் ஒருவன் கற்பின் மேற்குலத்துளொருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தேசென்று வழிபடுவானாதலால்: என்பது.

† சிலப்பதிகாரம்—நீர்ப்படைக்காதை. 127-138

இன்புற்றுவாழுமாறு இவ்வேந்தன் கண்ணகியின்பொருட்டுப் பெருவிழா ஒன்று நடத்தினன். இதனாற் கண்ணகியின்சினம் தணியவே, நாடு நன்னிலையை எய்திற்று; குடிகளும் இனிதுவாழ்ந்தனர். புறநானூற்றில் இவனைப் பாடியுள்ள புலவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார் என்பவரேயாவர். அப்பாடலால் (59) இவனது அருங்குணங்கள் பலவும் வெளியாகின்றன. இவன் சித்திரமாடத்து இறந்தான்போலும்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்:- இவன் கடைச்சங்கநாளில் விளங்கிய பாண்டியர்களுள் ஒருவன். இவனைச் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனது புதல்வனென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவனது தந்தை சின்னாட்களே அரசுசெலுத்தியமையின் இவன் இளமையிலேயே அரசுகட்டிலேறல் இன்றியமையாததாயிற்று. இவன் ஆட்சிபுரிந்துவரும் நாட்களில், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் இந்நெடுஞ்செழியனை இளைஞன் என்று இகழ்ந்து கூறிப் பாண்டிநாட்டைக் கைப்பற்றக்கருதி மதுரைமாநகரை முற்றுகையிட்டார்கள். இதனையுணர்ந்த நெடுஞ்செழியன், பெருஞ்சினங்கொண்டு, 'புல்லிய வார்த்தைகளைக் கூறிய சினம்பொருந்திய அரசரைப் பொறுத்தற்கரிய போரின்கண்ணே சிதறப்பொருது, முரசத்தோடுகூட அவரைக் கைக்கொண்டிலேனாயின், பொருந்திய எனது குடைநிழற்கண் வாழ்வோராகிய குடிமக்கள், தாங்கள் சென்றடையும் நிழற் காணாதே கொடியன் எம்முடைய வேந்தன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழிதூற்றும் கொடுங்கோலையுடையேனாகுக; உயர்ந்த தலைமையுடனே மேம்பட்ட கேள்வியையுடைய மாங்குடிமருதன் முதல்வனாக உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழுந் தலைமையையுடைய புலவர் பாடாது நீங்குக எனது நிலவெல்லையை; என்னாற் புரக்கப்படுங்கேளிர் துயரம்மிக இரக்குமவர்கட்குக் கொடாத வறுமையை யானுற' என்று வஞ்சினங்கூறிப் போருக்கெழுந்து உழிஞைசூடிப் போர்புரியத்தொடங்கினன். இவன் மிக்க இளைஞனாயினும் சிறிதும் அஞ்சாமற் கடும்போர் புரிந்து அன்னவர் எழுவரும் புறங்காட்டியோடச்செய்தனன். தோல்வியுற்ற எழுவரும் ஓடிச்சென்று சோழநாட்டிற் புகும்போது நெடுஞ்செழி

யன் அவர்களை விடாது பின்தொடர்ந்துசென்று தலையாலங்கானத்து மறித்துப் பெரும்போர்நடத்தி வாகைமிலேந்தனன் (புறம் - 19, 23). இவன், இதனோடு நில்லாமற் பகைஞர்களை அவர்களது உறையூர், வஞ்சி முதலான நகரங்கள்வரையிற் போர்ப்பறையொலிப்பத் துரத்திச்சென்று அன்னோரது உரிமைமகளிர் நாணமுற்று உயிர்துறக்குமாறு அவர்களைக் கொன்றனன் (புறம் - 78). வேள் - எவ்வி முன்னர் ஆட்சிபுரிந்ததும் இருங்கோவேண்மானுக்குரியதுமாகிய மிழலைக்கூற்றத்தையும்* அதற்கடுத்துள்ளதும் வேளிர்களுக்குரியதுமாகிய முத்தூர்க்கூற்றத்தையும்† இப்போரின் இறுதியிற் கைப்பற்றிப் பாண்டிநாட்டோடு சேர்த்துக்கொண்டான் (புறம் - 24). இப்போர்நிகழுங்கால், இவன் மிகவும் இளைஞனாயிருந்தனன் என்பது, 'சதங்கை வாங்கப்பட்ட காலிலே ஒள்ளிய வீரக்கழலினைச் செறித்துக் குடுமியொழிக்கப்பட்ட சென்னிக்கண்ணே வேம்பினது ஒள்ளிய தளிரை நெடிய கொடியாகிய உழிஞைக் கொடியோடு சூடிக் குறிய வளைகளையொழிக்கப்பட்ட கையின்கண்ணே வில்லைப்பிடித்து நெடிய தேரினதுமொட்டுப் பொலிவுபெறநின்றவன் யாரோதான்? யாரேயாயினும் அவன்கண்ணி வாழ்வதாக; தாரையணிந்து ஐம்படைத்தாலி கழித்ததுமிலன்; பாலையொழித்து உணவும் இன்றுண்டான்; முறைமுறையாக வெகுண்டு மேல்வந்த புதியவீரரை மதித்ததும் அவமதித்ததும் இலன்; அவரை யிறுகப்பிடித்துப் பரந்த ஆகாயத்தின்கண்ணே ஒலியெழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின்கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததுவும், இவ்வாறு செய்தேமென்று தன்னை மிகுத்ததுவும் அதனினும் இலன்;' என்னும் பொருள்கொண்ட 'கிண்கிணிகளைந்தகால்' என்று தொடங்கும் இடைக்குன்றூர்கிழாரது பாடலால் தெளிவாகப் புலப்படுகின்றது (புறம் - 77).

இவ்வேந்தன், இரவிற் பாசறையின்கண் போரிற் புண்பட்ட வீரர்களைப் படைத்தலைவன் முன்னே காட்டிச்செல்லத் துயில் சிறிதுமின்றித் தானே அவர்களை நேரிற்கண்டு அன்புடன் இன்சொற்கூறிப் பாராட்டுவது வழக்கம் என்பது 'வேப்பந்தாரைத் தலையிலேகட்டின வலிய காம்பினையுடை வேலோடே முன்செல்கின்ற சேனாபதி புண்பட்ட

---

* இது புதுக்கோட்டை ராச்சியத்திலும் தஞ்சாவூர்ஜில்லா அறந்தாங்கித் தாலுகாவிலும் உள்ள ஒரு பிரதேசமாகும்.

† இது சேரநாட்டிலுள்ளது என்று ஒரு கல்வெட்டினாற் புலப்படுகின்றது.

வீரரை அடைவே அடைவே காட்ட.........செருக்கின குதிரைகள் கரிய சேற்றையுடைய தெருவிலே தம்மேலே வீசுந் துளிகளையுதற, இடத்தோளினின்றும் நழுவிவீழ்ந்த அழகினையுடைய ஒலியலை இடப் பக்கத்தே யணைத்துக்கொண்டு, வாளைத் தோளிலே கோத்த தறுகண்மை யுடைய வாளெடுப்பான் தோளிலேவைத்த வலக்கையையுடையவ னுய்ப் புண்பட்டவீரர்க்கு அகமலர்ச்சி தோன்ற முகம்பொருந்தி, நூலாலே சட்டத்தைக் கட்டின முத்தமாலையையுடைய கொற்றக் குடை தவ்வென்னும் ஓசைப்பட்டு அசைந்து பாக்கின்ற துளியைக் காக்க நள்ளென்னும் ஓசையையுடைய நடுயாமத்துப் பள்ளிகொள்ளா னுய்ச் சிலவீரரோடு புண்பட்டோரைப் பரிகரித்துத் திரிதலைச்செய்யும் அரசன்' என்று பொருள்படும் 'வேம்புதலையாத்த நோன்காழெஃகமொடு' என்னும் நெடுநல்வாடைப் பாடற்பகுதியால் நன்கறியக்கிடக்கின்றது.

இங்ஙனம் பெருவீரனுகிய இந்நெடுஞ்செழியன், தான் ஒருவனுக நின்று பேரரசர் இருவரையும் சிற்றரசர் ஐவரையும் தலையாலங்கானத்து வென்றசெய்தி மூன்றும் இராசசிங்கபாண்டியனது சின்னமனூர்ச் செப்பேட்டிலும் குறிக்கப்பெற்றுளது (Madras G. O. No 503 Public Dated 27-6-07.).

இனி, 'நகுதக்கனரே நாடுமீக்கூறுநர்' என்ற 72-ஆம் புறப்பாட்டி ஞல், இம்மன்னன் கற்றுத்துறைபோய காவலன் என்பதும், கற்ருேர் பாற் பேரன்பும் பெருமதிப்பும் உடையவன் என்பதும் நன்குவிளங்கு கின்றன. இவன் புலவர்பெருமக்களிடத்து எத்தகைய மதிப்பு வைத்திருந்தனன் என்பது,

'ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனுக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை'

என்னும் புறப்பாட்டடிகளில் இவன் கூறியுள்ள உயர்மொழிகளால் ஒரு வாறு புலப்படும்.

பத்துப்பாட்டிலுள்ள மதுரைக்காஞ்சியும் நெடுநல்வாடையும் இவ் வேந்தன்மீது பாடப்பட்ட நூல்களேயாகும். இவ் வரியநூல்களைப் பாடிய புலவர்பெருமக்கள் முறையே மாங்குடிமருதனுரும் மதுரைக் கணக்காயனுர்மகனுர் நக்கீரனுருமேயாவர்.

நெடுஞ்செழியன் போர்விருப்பு மிக்குடையவனாய்,

'ஒளிறிலைய வெஃகேந்தி
அரசுபட வமருழக்கி
முடித்தலை யடுப்பாகப்
புனற்குருதி யுலைக்கொளீஇத்
தொடித்தோட் டுடுப்பிற் றுழந்த வல்சியின்
அடுகளம் வேட்டு'

வாணாட்களைக் கழித்துவந்தமையின், இவனது அவைக்களப்புலவர் தலைவராகிய மாங்குடிமருதனாரென்பார் வீடடைதற்கேதுவான அறநெறியைக் கைப்பிடித்தொழுகுமாறு இவனுக்கு நிலையாமையை அறிவுறுத்தக்கருதியே 'மதுரைக்காஞ்சி' என்றதோர் அரியநூலை இயற்றியுள்ளார். இந்நூலால் இவனது முன்னோரது பெருமையும் இவனது செங்கோற்சிறப்பும் வீரமும் பாண்டிநாட்டின் வளமும், மதுரைமாநகரின் வனப்பும் பிறவும் இனிதுணரப்படும். இஃது எழுநூற்றெண்பத்திரண்டு அடிகளையுடையது.

'தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்
றொன்முது கடவுட் பின்னர் மேய
வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந'

என்னும் மதுரைக்காஞ்சியடிகளிற் பாண்டியராக மதுரையில் வீற்றிருந்து அரசாண்ட சோமசுந்தரக்கடவுளின்வழியில் தோன்றியவன் இந்நெடுஞ்செழியன் என்று மாங்குடிமருதனார் குறித்திருப்பது ஈண்டு அறியத்தக்கது.

பாண்டியன் கானப்பேர் கடந்த உக்கிரப்பெருவழுதி:—கடைச்சங்கத்தைப் புரந்துவந்த பாண்டியமன்னர்களுள் இவனே இறுதியில் இருந்தவன். இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனது புதல்வன் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவன் தன் பகைஞனாகிய வேங்கைமார்பனைப் போரில்வென்று அவனுக்குரிய கானப்பேரெயில் (காளையார்கோயில்) என்னும் ஊரைக் கைப்பற்றியவனாதலின் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி என்று வழங்கப்பட்டனன் (புறம்—21). மாரிவெண்கோ என்னும் சேரமன்னனும் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழமன்னனும் இவனுக்குச்

சிறந்த நண்பர்களாக இருந்தனர் (புறம்-367). இவன் சங்கப்புலவர்களோடு ஒப்பப்பாடும் ஆற்றலுடைய பெரும்புலவனுக விளங்கியமை ஈண்டு உணரத்தக்கது. மதுரை உப்பூரிகுடிகிழார்மகனுவார் உருத்திரசன்மரைக்கொண்டு அகநானூறு தொகுப்பித்தோன் இவ்வேந்தனேயாவன். இவன் தலைமையிலேதான் கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேற்றப் பெற்றது என்று ஒருகதை வழங்குகிறது; இஃது உண்மையன்று என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவன் குறிஞ்சியையும் மருதத்தையும் புனைந்துபாடுவதில் வன்மையுடையவன். இவன் பாடியனவாக நற்றிணையில் ஒருபாடலும் அகநானூற்றில் ஒருபாடலும் உள்ளன (நற்றிணை 98; அகநானூறு 26). இவன்காலத்திற்குப்பின்னர்க் கடைச்சங்கம் நடைபெறுமல் அழிவுற்றது என்பது களவியலுரையால் உணரப் படுகின்றது. ஆனால் அச்சங்கம் அழிந்தமைக்குத் தற்காலம் சொல்லப் படுங் காரணங்கள் உண்மையென்று தோன்றவில்லை. இவனுக்குப்பிறகு பாண்டிநாட்டில் அக்காலத்தில் ஆட்சிபுரிந்த மன்னர் யாவரென்பது இதுபோது புலப்படவில்லை.

இனி, இவ்வேந்தர்களேயன்றிக் கடைச்சங்ககாலில் வேறுசில பாண்டியமன்னர்களும் இருந்தனர் என்பது சங்கத்துச்சான்றோர்கள் அருளிய எட்டுத்தொகைநூல்களால் அறியப்படுகின்றது. அன்னோர், கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி, பன்னடுதந்த பாண்டியன் மாறன்வழுதி, நல்வழுதி, கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி, இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன், வெள்ளியம்பலத்துத்துஞ்சிய பெருவழுதி, நம்பி நெடுஞ்செழியன், குறுவழுதி என்போர். அவர்களைப்பற்றிய வரலாறுகள் நன்கு புலப்படாமையின், சிற்சில குறிப்புக்களே ஈண்டு எழுதப்படுகின்றன.

கருங்கையொள்வாட் பெரும்பெயர்வழுதி:—சோழன் கரிகாற் பெருவளத்தான்காலத்தில் இருந்தவன். அவ்வளவனது மாமனுகிய இரும்பிடர்த்தலையார் என்ற புலவரால் பாடப்பெற்றவன்; மிக்க வீரமும் கொடையும் உடையவன் (புறம்—3).

பன்னடுதந்த பாண்டியன் மாறன்வழுதி:—சிறந்த செந்தமிழ்ப் புலவன்; (குறுந்தொகை 270). எட்டுத்தொகையுள் ஒன்ருகிய நற்றிணை

யைத் தொகுப்பித்தோன் இம்மன்னனே யாவன் (நற்றிணை இறுதிக் கட்டுரை).

நல்வழுதி:—வையையாற்றைச் சிறப்பிக்கும் பன்னிரண்டாம் பரி பாடலை இயற்றியவன். இப்பாடலிற் கூறப்பெற்றுள்ள புதுநீர்விழாவும் வையையின் சிறப்பும் படித்தின்புறத்தக்கன.

கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதி:—வடபுலமன்னர்களைப் போரிற் புறங்கண்டு வெற்றிப்புகழை எங்கும் பரப்பிய பெருவீரன் (புறம் 51, 52).

இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன்:—வண்மையும் வீரமும் உடையவன் என்பது புலவர் தலைவராகிய நக்கீரனார் பாடிய 56—ஆம் புறப்பாட்டினால் நன்குவிளங்குகின்றது. இப்பாட்டினாற் கடைச் சங்ககாலத்தில் மேனாட்டு யவனர்கள் நம் தமிழகத்தில் மதுவகைகளைக் கொணர்ந்து விற்றுவந்தனர் என்பது இனிதுணரப்படுகின்றது.

குறுவழுதி:-அகநானூற்றிலுள்ள 150-ஆம் பாடலை இயற்றிய வேந்தனாவன்.

வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி:-காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்னும் புலவராற் புகழ்ந்து பாடப்பெற்றவன் (புறம் 58); சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனுக்குச் சிறந்த நட்பினன்.

நம்பி நெடுஞ்செழியன்:- அரசர்கட்குரிய எல்லா இன்பங்களையும் துய்த்து, வண்மை வீரம் நடுநிலைமை முதலான அருங்குணங்களெல்லாம் ஒருங்கே யமையப்பெற்றுப் பெருமையோடும் புகழோடும் வாழ்ந்தவன். இவன் இறந்தஞான்று பேரெயின்முறுவலார் என்னும் புலவர் பாடியுள்ள கையறுநிலை எத்தகையோருடைய மனத்தையும் உருகச்செய்யும் இயல்புவாய்ந்ததாகும் (புறம்—239).

இனி, கடைச்சங்கம் இரீஇய பாண்டிமன்னர் நாற்பத்தொன்பதின்மருள் கவியரங்கேறினோர் மூவர் என்று இறையனாரகப்பொருளுரை உணர்த்துகின்றது (பக்கம்—6). சங்கநூல்களை ஆராய்ந்து பார்க்குங்கால், தண்டமிழ்ப்புலமைசான்ற ஒண்டிறற் பாண்டியமன்னர்கள் பன்னிருவர், கடைச்சங்கநாளில் இருந்துள்ளார் என்பது நன்கு

புலப்படுகின்றது. இப்பன்னிருவரும் இயற்றியுள்ள சிறந்த செந்தமிழ்ப் பாக்கள் நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், அகநானூறு, புறநானூறு ஆகிய ஐந்து தொகைநூல்களிலும் காணப்படுகின்றன. எனவே சங்கப்புலவர்களோடு ஒப்பப்பாடும் புலமையும் பெருமையும் வாய்ந்துள்ள இப் பன்னிரு பாண்டிமன்னர்களும் கவியாங்கேறியவர்களாதல் வேண்டுமன்றோ? அங்ஙனமாயின், கடைச்சங்கம் இரீஇய பாண்டியர்களுள் கவியாங்கேறினோர் மூவரென்று இறையனாரகப் பொருளுரை உரைப்பது சிறிதும் பொருந்தவில்லை. ஆகவே, இதனை அறிஞர்கள் ஆராய்ந்து உண்மையை உணர்த்துவார்களாக.

இனி, இம்மன்னர்களது ஆட்சிக்காலங்களின் வரையறையையும் எவனுக்குப்பின் எவன் பட்டத்திற்குவந்தனன் என்பதையும் ஒருவனுக்கு மற்றொருவன் என்ன முறையினன் என்பதையும் சங்கநூல்களைக்கொண்டு ஆராய்ந்து கூறுவதும் இயலாதவையாயுள்ளன. நுணுகியறிந்தவற்றை ஆங்காங்குக் குறித்துள்ளோம். கடைச்சங்ககாலத்தின் பிற்பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டிய அரசர்களைச் சில ஆராய்ச்சியாளர் அடியில் வருமாறு முறைப்படுத்தி எழுதியுள்ளனர்.

1. ஆரியப்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்.
2. வெற்றிவேற்செழியன் என்ற சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்.
3. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.
4. கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி.

நான்காம் அதிகாரம்.

பாண்டிநாட்டிற் களப்பிரர் ஆட்சி.

பாண்டியருள் வலியிழந்த ஓரரசன் ஆட்சிபுரியும்போது களப்பிரர்வகுப்பைச்சேர்ந்த ஒருமன்னன் பாண்டிநாட்டின்மீது படையெடுத்துச்சென்று அதனைக் கவர்ந்துகொண்டு அரசாளத்தொடங்கினன். சங்கநூல்களிற் 'களப்பிரர்' என்ற மொழியே காணப்படவில்லை. கி. பி.

500—ல் வாழ்ந்தவராகிய வராகமிகிரரும் தென்னாட்டவரின் வரிசையிற் களப்பிரரைக் குறிக்கவில்லை. ஆனால், கி. பி. 7, 8—ஆம் நூற்றாண்டு களிலிருந்த பல்லவவேந்தர்களாகிய சிம்மவிஷ்ணுவும் முதல் நரசிம்ம வர்மனும்[1] மேலைச்சளுக்கிய வேந்தர்களாகிய முதல் விக்கிரமாதித்தனும் விசயாதித்தனும் இரண்டாம் விக்கிரமாதித்தனும்[2] களப்பிரரை வென்றதாகக் கூறிக்கொள்ளுகின்றனர். ஆகவே, இவர்கள் கி. பி. ஆறாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேதான் பாண்டிநாட்டைக் கவர்ந்திருத்தல் வேண்டும். ஆயினும் இவர்கள் அந்நாட்டை நீண்டகாலம் ஆட்சிபுரிய வில்லை. இவர்களது ஆட்சி சிறிதுகாலமே நடைபெற்றதென்பது, பாண்டியன் கடுங்கோன் என்பான், பாண்டிநாட்டைக் கவர்ந்து கொண்ட அக் களப்பிரவேந்தனையே போரிற் புறங்கண்டு தன்னாட்டைக் கைப்பற்றி மீண்டும் அரசாளத்தொடங்கினன் என்று கூறும் வேள்விக் குடிச்செப்பேடுகளால் அறியப்படுகின்றது.[3] இது நிகழ்ந்தது சற்றேறக்குறையக் கி. பி. 560 ஆம் ஆண்டில் என்பர்.

இனி, பெரியபுராணத்து மூர்த்திநாயனார்புராணமும்[4] நம்பிதிருவிளையாடற்புராணமும்[5] கருநாடவேந்தனொருவன் பாண்டிமண்டலத்தைக்

---

[1] South Indian Inscriptions Vol. II page 356 Vol. I page 152.

[2] Indian Antiquary Vol IX, page 129, Vol. VII page 303. Epigraphia Indica Vol, V, page 204.

[3] வேள்விக்குடிச் செப்பேடுகளில் 4-ஆம் ஏடு பக்கம் - 1

[4] கானக்கடி சூழ்வடு கக்கரு நாடக்காவன்
மானப்படை மன்னன் வலிந்து நிலங்கொள்வானாய்
யானைக்குதி ரைக்கரு விப்படை வீரர்திண்டேர்
சேனைக்கட லுங்கொடு தென்றிசை நோக்கிவந்தான்.

வந்துற்றபெ ரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப்பொதி யிற்றமிழ் நாடுடை மன்னன்வீரம்
சிந்தச்செரு வென்றுதன் ஞணை செலுத்துமாற்றாற்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல்கொண்டான்.

(பெரியபுராணம் மூர்த்திநாயனர் புராணம்)

[5] துன்னு சேனையிற் றுளங்கிய வொருகரு நாட
மன்ன னன்னநாள் வந்தருட் டென்னனை யோட்டி
கன்னி மண்டலங் கொண்டமண் கையர்கை விழுந்து
முன்ன நீடிய வைதிக முறைமையு மொழித்தான்.

கவர்ந்தாண்டனனென்றும், அவன்காலத்தே வைதிகநெறியும் சைவநெறியும் ஒருங்கே அழியச் சமணசமயம் மிகச்செழித்ததென்றும், பின்னர் ஓரிரவில் அவன் கொல்லப்பட்டானென்றும் கூறுகின்றன. இவ்விருநூல்களும் கூறும் கருநாடவேந்தன் களப்பிரனாகத்தானிருத்தல்வேண்டுமென்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அரசாங்கக் கல்வெட்டு ஆராய்ச்சியாளரும் இங்ஙனமே எண்ணுகின்றனர்.

ஐந்தாம் அதிகாரம்

கி. பி. 575 முதல் கி. பி. 900 வரை ஆட்சிபுரிந்த பாண்டியர்கள்.

பாண்டியன் கடுங்கோன்:— இம்மன்னன் கி. பி. 575 முதல் கி. பி. 600 வரையில் ஆட்சிபுரிந்தனன் என்று தெரிகிறது. பாண்டிநாட்டிற் சில பகுதிகளைக் களப்பிரரிடத்தினின்று முதலிற் கைப்பற்றி மீண்டும் பாண்டியரது ஆட்சியை மதுரையில் நிலைபெறுமாறு செய்தவன் இவ்வேந்தனேயாவன். இவன் களப்பிரரைப் போரிற் புறங்கண்டு அன்னோரது ஆளுகைக்குட்பட்டிருந்த தன் நாட்டைக் கைப்பற்றி அரசுசெலுத்திய வரலாற்றை வேள்விக்குடிச்செப்பேடுகள் நன்கு விளக்குகின்றன. அப்பகுதி:—

"களப்ரனென்னுங் கலியரசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடன் முளைத்த பருதிபோற் பாண்டியாதிராசன் வெளிப்பட்டு
விடுகதிரவிரொளி விலக வீற்றிருந்து
வேலைசூழ்ந்த வியலிடத்துக்
கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கிச்
செங்கோ லோச்சி வெண்குடை நீழற்
றங்கொளி நிறைந்த தரணி மங்கையைப்
பிறர்பா லுரிமை திறவிதி னீக்கித்

தன்பா லுரிமை நன்கன மமைத்த
